# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்


வெளிவருகின்றது

ஏப்ரல் 13 முதல்

உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

காலாண்டு சஞ்சிகை



நதி 12 APRIL 01, 2002 பாலம் 07



சர்வதேச காலாண்டு சஞ்சிகை வெளியீடு

2002 ஏப்ரல் 13 சனி

உலக தமிழோசை

விழாவிற்கு தமிழ் அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நேரம் மாலை 5:00 தொடக்கம் 8:30 வரை

சித்திரபானு வருடம் சித்திரை 01 வள்ளுவர் ஆண்டு 2033

தொலைபேசி 416-282-8059

தொலைநகல் 416-282-4978

மின்அஞ்சல் info@ulakathamiloszai.com

இணையதளம் www.ulakathamiloszai.com

தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வாசகர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!





RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## உன்னை அறிந்தால்

*"பெற்றதாயும் பிறந்த பொன்நாடும்*
*நற்றவ வானில் நனி சிறந்ததே"*

நம்மில் பலர் பிறந்தது ஒரு நாடு. வாழ்வது இன்னொரு நாடு. இதில் நன்மைகளும் தீமைகளும் கலந்து இருக்கின்றது. எங்கு இருந்தாலும் எமது சந்தோஷம், துக்கம் யாவும் எம்மில் / எமக்குள்ளேயே தங்கியுள்ளது.

நம்நாட்டில் இருக்கும் போது, எம்முடைய சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் ஒரு வரையறை இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கு வாழ்க்கைச் சூழ்நிலை, எமது கலாசாரங்கள் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். நாம் புகுந்த கனடா நாட்டின் முக்கியமா ரொரன்ரோ பிரதேச வாழ்க்கை முறை, கலாசாரம் முற்றிலும் வேறுபட்டதை நாம் அவதானிக்கின்றோம் மேலும் முக்கியமானதொன்றையும் அவதானிக்கலாம்.

அதாவது எமது அயலவர்கள் வேறு வேறு இனத்தை நிறத்தைக் கொண்டவராகவும் வெவ்வேறு தாய் மொழியை பேசுபவர்களாகவும் காணப்படுவார்கள். இதனால் நல்ல விடயங்களையும் தகாத விடயங்களையும் இலகுவாக பின்பற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. இது கூடியளவு எமது சிறார்களிற்கே பொருந்தும். எது சரி என்பதனை எமது சிறார்களிற்குத் தெரியப்படுத்தி சரியான பாதையில் செலுத்துவது பெற்றோரின் பொறுப்பேயாகும்.

பிள்ளைகளின் ஆரம்பகால வளர்ச்சிக்கும், அவர்களின் தகுந்த பாதையை வகுத்தலிற்கும், தரமான நண்பர்களைத் தெரிவு செய்பவற்றிலும் பெற்றோரின் பங்கே மிக அதிகம். எனவே பிள்ளைகளின் தவறிற்கு அவர்களைக் குற்றம் சொல்வதைவிட பெற்றோரை குற்றம் சாட்டுவதே சிறந்தது.

**நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!**

-நெற்றிக்கண்ணன்

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- பாமரர் பரம்பொருளைப் பற்றிப் பெருமிதமாகப் பேசுகின்றனர். ஆனால் அவர்கள் அதை அனுஷ்டானத்தில் கொண்டு வருவதில்லை. சான்றோர் செந்நெறியே வடிவெடுத்தவர்களாக வாழ்கின்றனர் அதைப் பற்றி ஒன்றும் பேசுவதில்லை.
- முற்றிலும் தன்மயமாயிருப்பவன் யாண்டும் யாவற்றினின்றும் விடுபட்டவன்.
- மனதில் உண்டாகின்ற தூய ஆசைகள் நிறைவேறப் பெறுகின்றன. இது பக்தர்களின் அனு"பவம்.


Singapore Communication

❖Limited time offer* ❖Reliable & Friendly Service

Free Phone & $25.00 Plan

❖ 50 mins day time Free
❖ Evenings & Weekend Free
❖ Every Day (12noon - 1p.m) Free
❖ Call waiting, Conference Calling & Voice Mail Free

* Add.Day time min 0.30cts only ❖ Bad Credit No Problem

More Info: Pl..Call: Sathi / Raj

Office:416 745-2378/416 740-5292 Hot Line 416 866-9700

5010 Steeles Ave.., W., Unit 17ABC - Kipling & Steeles





சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.



துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

© 416 321-1515 / 905 294 2429 / 416 452 6975

4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் -101

-விஜே குலத்துங்கம்



நாம் எல்லோரும் விமானப் பயணம் செய்தவர்களாக இருக்கின்றோம். சாதாரண பெரும் வீதிகளில் Lane கள் அடையாளமிட்டிருந்தும். கார்கள் லேன் மாறும்போது ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின்றன. விமானங்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ள இந்தக் காலங்களில் எவ்வாறு இந்த விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதாமல் பாதுகாக்கப்படுகின்றன என்பது பற்றிப் பார்ப்போம். விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு என்றவுடன் எல்லோரும் நினைப்பது விமானநிலையத்தில் தெரியும் உயரமான கட்டுப்பாட்டுக் கோபுரம்தான். இதைக் கட்டுப்படுத்துகின்றது என்பதாகும். ஆனால் உண்மை அதுவல்ல. இவற்றையும் உள்ளடக்கி பல கட்டுப்பாட்டு நிலையங்கள் ஒன்று சேர்ந்த ஒரு பெரிய தொகுதிதான் இந்த விமானப் போக்குவரத்துக் கட்டுபாட்டைச் செய்கின்றது.

பொதுவாக இந்த கட்டுப்பாட்டு அமைப்புகள் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஆனால் கட்டுப்பாட்டு நிலையங்களின் பெயர்கள் வேறுபட்டாலும் செயற்பாடு ஒன்றாகத் தானிருக்கும். உதாரணத்திற்காக அமெரிக்க நாட்டிலுள்ள கட்டுப்பாட்டைப் பற்றிப் பார்ப்போம். முதலில் முழுநாட்டினதும் விண்வெளியானது 21 பெரிய Zoneகளாக அல்லது Centreகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு Zoneஉம் பல Sector களாக அல்லது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு Sector இலும் 80 கிலோ மீற்றர் விட்டமுடைய Tracon எனப்படும் பகுதிகள் உண்டு. Tracon என்பது Terminal Radar Approach Control எனப்படும். இந்த ஒவ்வொரு Tracon பகுதியிலும் பல விமான நிலையங்கள் அமைந்திருக்கும். ஒவ்வொரு விமானநிலையத்திற்கும் அதைச் சுற்றி 8 கிலோமீற்றர் ஆரையுள்ள வட்டமான விண்வெளி அதன் கட்டுப்பாட்டிலிருக்கும்.

முழு நாட்டிற்குமுரிய போக்குவரத்தை ATCSCC என்னும் ஆரை Traffic Control System Command Centre மேற்பார்வை செய்கின்றது. இதைவிட இந்த நிலையம் ஒவ்வொரு Zone களிலுமுள்ள காலநிலை. அதிகரித்த விமானப் போக்குவரத்து நெரிசல். பழுதடைந்த ஓடுபாதை போன்ற விடங்களையும் கண்காணிக்கும். ஒவ்வொரு Zoneகளிலும் ARTCC எனப்படும் Air Route Traffic Control Centreகள் இருக்கும். முன்னர் குறிப்பிட்ட Tracon பகுதியைச் சேர்ந்த 80 கிலோ மீற்றர் விட்டமுள்ள பிரதேசத்தையும், விமான நிலையங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களையும் தவிர்ந்த மற்றைய பிரதேசங்கள் இந்த ARTCC இன் கட்டுப்பாட்டில் இருக்கும். Tracon என்பது இறங்குவதற்காக விமான நிலையங்களை நோக்கி வரும் விமானங்களையும், விமான நிலையத்தில் இருந்து மேல் எழும்பி விமானநிலையத்தை விட்டகன்று செல்லும் விமானங்களையும் கட்டுப்படுத்தும்.

Air Traffic Control Centre அல்லது ATCT எனப்படுவதுதான் நாங்கள் விமானநிலையத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கும் கட்டுப்பாட்டுக் கோபுரம் ஆகும். இவை Landing எனப்படும் தரையிறங்கலையும், Take - off எனப்படும் விமானம் மேல் எழும்புவதையும் கட்டுப்படுத்தும். ஒரு விமானம் பறக்கும் போது, வெவ்வேறு நிலைகளாக அது பிரிக்கப்பட்டிருக்கும்.

1. Pre-flight - இதில் விமான இயந்திரம் இயக்கப்பட்டு, விமானம் பின்னோக்கி தள்ளப்பட்டு, ஓடுபாதையில் விடப்படும்.

2. Take-off - விமானம் ஓடு பாதையில் வேகமாக ஓடும் நிலை.

3. Departure - இது தரையைவிட்டு விமானம் மேலே எழும்புவதாகும்.

4.Enroute - இதன்போது விமானம் ஒவ்வொரு Zone ஐயும் கடந்து போய்சேர வேண்டிய இடத்தை அடையும்.

5. Descent - இதன்போது விமானம் படிப்படியாக உயரத்தைக் குறைத்துக் கீழ் நோக்கி இறங்கும்.

6. Approach - விமானி விமானத்தை ஓடுபாதைக்கு நேராக கொண்டுவருதல்.

7. Landing - விமானம் ஓடுபாதையில் தரையிறங்கி, ஓடிச் சென்று விமானநிலையத்தின் Terminal ஐ அடையும்.

பயணிகள் விமானத்தில் ஏறும் வேளையில், விமானி விமானத்தின் - நிறுவனத்தின் பெயர், விமானத்தின் இலக்கம், விமானத்தின் வகையும், அதன் உபகரணங்களும், செலுத்த உத்தேசித்திருக்கும் வேகம், பறக்கவிருக்கும் உயரம், விமானம் செல்லும் பாதை - flight route, குறிப்பிட்ட விமானத்து உள்ள code - இதை Beacon Code என்பார்கள் - இப்படியான பல விடயங்கள் அடங்கிய file ஒன்றை விமான நிலைய கட்டுப்பாட்டு கோபுரத்திற்கு அனுப்புவார். இது விமானம் புறப்படுவதற்கு 30 நிமிடங்கள் முன்னதாக அனுப்பப்படவேண்டும். இதைவிட விமானி விமானம் செல்லும் பாதை, பாதையினூடாக இருக்கும் காலநிலை போன்றவற்றை ஆராய்வார். விமானக் கட்டுப்பாட்டு கோபுரத்தில் உள்ள Flight data person என்னும் அதிகாரி விமானியால் அனுப்பப்பட்ட file ஐ ஆராய்ந்து அதை எல்லாவற்றையும் இணைக்கும் மின்கணினி தொகுதிக்கு அனுப்புவார். இந்த மின்கணினித் தொகுதியானது flight progress strip என்னும் தகவல்கள் அடங்கிய file ஐ விமானம் செல்லும் பாதைகளிலுள்ள கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு அனுப்புகின்றது. இந்த file ஆனது அடிக்கடி நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும்.

விமானியின் file ஆனது Flight data person என்னும் உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அவர் இதுபற்றி ground control என்னும் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அறிவிப்பார். தரைக் கட்டுப்பாட்டு அதிகாரி. ஓடுபாதை. தரைவழி ஆகியவற்றை சரிபார்த்த பின்னர். விமானத்தை நகர்த்த அனுமதியளிப்பார். இவர் வானொலி ஊடாக விமானியுடன் கதைத்து அவர் எந்தப் பாதையால் செல்லவேண்டும் என்பது பற்றி அறிவுறுத்துவார். விமானம் நகரும் போது வெறுங்கண்ணாலும், Radar மூலமாகவும் வேறு விமானங்கள் குறுக்காக வருகின்றதா என்பதை அவதானிப்பார்.

கடைசியாக மேலே பறப்பதற்கான விமானத்தின் ஓடுகைக்கு முன்பாக தரைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர், விமானக் கட்டுப்பாட்டு பொறுப்பை விமான நிலைய போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி (Airport trafic control)இடம் ஒப்படைப்பார். இவர் கட்டுப்பாட்டு கோபுரத்தில் இருந்து, வானிலும் தரையிலும் இருக்கும் விமானங்களை Radar மூலம் அவதானிப்பார். இவர் விமானத்திற்கு Take- off இற்கான அனுமதியைக் கொடுக்க, விமானம் ஓடுபாதையை விட்டு மேலே கிளம்ப, கட்டுப்பாட்டுப் பொறுப்பு Tracon எனப்படும் Terminal Radar Approach Control நிலையத்திடம் கொடுக்கப்படும். இங்குள்ள Departure Controller இந்தப் பகுதிக்குரிய 80 கி.மீ. விண்வெளிக்குள் வரும் விமானங்களுக்குரிய அசைவுகளை அவதானித்து அவற்றைக் கட்டுப்படுத்துவார். இந்தப் பிரதேசத்தை விட்டகன்றபின் Zone இன் கட்டுப்பாட்டுக்குள் வந்து ஒவ்வொரு Zone களுக்கூடாகவும் விமானம் செல்லும் போது, அந்த விமானத்துக்குரிய தகவல்கள் அடுத்த Zone இக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு Zone க்கூடாகச் செல்லும் போது விமானி அந்த Zone க்குரிய கட்டுப்பாட்டு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்குவார். காலநிலை சரியில்லாதவிடத்து, Zone களை மாற்றவேண்டிய நிலையும் ஏற்படும். இந்த Zone கள் ஒரு நாட்டிலிருந்து, மற்றைய நாட்டிற்குள் மாறிச் செல்கின்றது. கடற்பிரதேசங்களும் Zoneகளாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த நாடுகளின் வான்வெளிக்குள் அடங்கும்.

சென்றடையும் விமானநிலையத்திற்கு 241 கிலோமீற்றர் தூரத்தில் விமானம் வந்தவுடன் ஒரு குறிப்பிட்ட கோட்டின் வழியே விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும்படி பணிக்கப்படும் ஒவ்வொ விமானத்தின் வேகம், உயரம் ஆகிய விமானக் கட்டுப்பாட்டுத் தளத்தின விமானிகளுக்கு அறிவுறுத்தப்படும். Zone இல் இருந்து பொறுப்பு Tracon பகுதிக்கு கொடுக்கப்படும். இது விமானநிலையத்தில் இருந்து 80 கிலோமீற்றர் தூரத்தில் நடைபெறும். ஓடுபாதையில் இருந்து 16 கி.மீ. தூரத்தில் வரும்போது விமானநிலையத்தின் கட்டுப்பாட்டு கோபுரத்திலுள்ள கட்டுப்பாட்டு உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டிற்குள் விமானம் வரும். இவர் விமான ஓடுபாதையிலுள்ள மற்றைய விமானங்களின் நகர்வுகளையும் அவதானித்து விமானம் தரையிறங்க அனுமதியளிப்பார்.

விமான தரையைத் தொட்டவுடன், ground contrller அல்லது தரைக்கட்டுப்பாட்டு அதிகாரியிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படும். அவர் விமானம் எந்த ஓடுபாதை வழியாக செல்ல வேண்டும் என்பதையும், பின்னர் Terminal க்கு செல்லும் Taxi way எனப்படும் பாதையில் எந்த வழியால் செல்லவேண்டும் என்பதையும் விமானிக்கு அறிவுறுத்திவிட, விமானம் Terminal இல் குறிப்பிட்ட வாசல் கதவை அல்லது C ஐ அடையும்.

விமானத்தினுள் பயணிகள் உணவு அருந்திக் கொண்டும், படம் பார்த்துக் கொண்டும், நித்திரை கொண்டு இருக்கும் போதும் விமானிகள் எந்த நேரமும் விழிப்பாக, வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு கட்டுப்பாடு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விமானத்தை பாதுகாப்பாக கொண்டு சேர்க்கின்றார்.

************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -
361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது
wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?



கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற



Vitaplex

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.


Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

கிடைக்கும் இடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.



J DAYCARE



- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்:-
* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033

151 Lamareaux Dr., TownHouse 99A
(Finch/Birchmount) தொடர்புகளுக்கு: Mrs. S. J. சௌந்தரநாயகம்

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean Accredited Test & Repair Facility

PRUDENTIAL DR. MIDLAND AVE. LAWRENCE AVE N

Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## மகுடம் 2002

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளை மகுடம் 2002 கலைவிழாவை Barthust யூத சமூகத்தவர்களது கலைஅரங்கில் 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி மாலை 6:00 மணியளவில் ஆரம்பமானது.

இக்கலை நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக கல்லூரிப் பழைய மாணவரும் Ohio இல் பொறியியலாளராக (Structural Engineer) பணிபுரியும் கலாநிதி வி. பாலச்சந்திரன். P. Eng. அவர்கள் வருகைதந்து சிறப்பித்தார்.

திருமதி பாலச்சந்திரனும், கல்லூரி [illegible]னைநாள் உப அதிபர் திருமதி [illegible]ரமணியம் அவர்களும் மங்கல விளக்கேற்றி வைத்ததுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து சிறுவர்களின் கனேடிய தேசியகீதம், கலாநிதி V. பாலச்சந்திரனும், பழைய மாணவர் சங்கத் தலைவர் S. குகதாசனும் கனேடிய தேசியக் கொடியையும் கல்லூரிக் கொடியையும் ஏற்றி வைத்தார்கள். தமிழ்தாய் வாழ்த்தும், தாயகத்தில் உயிர் நீத்தவர்களுக்கான ஒரு நிமிட அஞ்சலியும் நடைபெற்றது.

Key Birds இசைக்குழுவினர் இடைஇடையே வந்து இன்னிசை வழங்கி சென்றார்கள். வாசு சின்னராசாவின் சதங்கை நர்த்தனாலய, கலாபவன மாணவர்களின் நடனநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திரையிசை நடனம். "யூனிவசிற்றி ம[illegible]ளை" நகைச்சுவை நாடகமும் நி[illegible]கு மெருகூட்டியது.

பழைய மாணவர்களின் சேவையைப் பாராட்டி திரு. திருமதி நாகலிங்கம், திரு. திருமதி பரராஜசிங்கம் அவர்களை கௌரவித்தது.

இந்நிகழ்ச்சிகளை திரு. சிவரூபன் துரைராசாவும் செல்வி கங்கா தாமோதரனும் நிகழ்ச்சித் தொகுப்பாளராக நடத்தினார்.

-சிவ ஞானம்

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# ஆண்டுப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் ஏப்பிரல் 27. 2002 பிற்பகல் 4:00 மணிக்கு 'நச்சி கொன்வீனியன்ஸின். கீழ்த்தளத்தில் (2800 எக்லிங்ரன் அவனியூ கிழக்கு. யூனிற் #2 இல். சங்கானைத் தளபாடச் சந்தைக்கு அருகாமையில்) இடம்பெறும்.

பழைய மாணவர்கள். அவர்களின் வாரிசுகள் அனைவரும் தவறாது பங்குகொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

பிரேரணைகள். யாவும் 19-04-2002 நள்ளிரவு 12:00 மணிக்கு முன். செயலாளர். கொ.இ.கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா. 685 Mccowan Rd., Box #66546, Scarborough, Ontario, M1J 3N8 என்ற விலாசத்திற்கு கிடைக்கக் [illegible]தாக அனுப்பப்பட வேண்டும். இன்றேல் தொலைநகல் மூலம் 416 609-2001 [illegible]து 905 471-3586 இற்கு அனுப்பப்பட வேண்டும்.

**தொடர்புகளுக்கு:** சி. குகதாசன் 416 609-2001
திருமதி. சு. சுப்பிரமணியம் 416 269-1173
கே.ரி.எம். விஜயகுமார் 647 290-9794 (பி.ப. 6:00 மணிக்குப்பின்)
வெ. ராஜகுலேந்திரன் 416 264-7453
ரீ. சிவரூபன் 416 267-9917

**SCHOOL & COMMUNITY MEETING**
TUESDAY, APRIL 02, 2002
7:00PM - 9:00PM
AGINCOURT COLLEGIATE INSTITUTE 2621 MIDLAND AVE. AUDITORIUM
PL CALL 416 393-8809


# நியூ மிலேனியத்தில்

## ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

**NTE AUTO INC.**
**New Trade Engineering**

# என். ரி. இ. ஓட்டோ இங்க்

சிவபாலன்

CONTACT: SIVABALAN
☎: (416) 750 - 1573
151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



IN NEW MILLENNIUM WE ARE ENTERING 10TH YEAR SERVICE IN SCARBORUGH


### குப்பிளான் - விக்கினேஸ்வரா மகாவித்தியாலம் கனடா வாழ் பழைய மாணவர்கள் குழுவின் ஒரு சந்திப்பு

கனடா வாழ் குப்பிளான் - விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் அமைப்பு ரீதியான ஒரு செயல்பாட்டின் முன் ஏற்பாடாக எதிர்வரும் ஏப்பிரல் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஸ்காபரோவில் உள்ள கனடா - கந்தசாமி கோயில் மண்படத்தில் பழைய மாணவர்களின் சந்திப்பு ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

திரு. கதிரிப்பிள்ளை - தங்கவடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இச் சந்தப்பில் அமைப்பாளர்களின் உரைகள். இப்போது உள்ள பாடசாலை, கிராமத்தின் கண்ணோட்டங்கள் பற்றிய ஆய்வுரைகள். உட்பட குப்பளான் கிராம மண்ணில் பிறந்த அகில இலங்கை. இந்திய புகழ் பெற்ற இசை வித்தகர் "பக்தி பண்ணரசு" கதிர் - சுந்தரலிங்கம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற வுள்ளது. சகல பழைய மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளமாறு அழைக்கப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு:
(416) 754 - 0963 / (416) 398 - 3319

# ஆரோக்கிய வாழ்வு (74)

- N. செல்வசோதி



## வயிற்று வியாதிகளும் பாதுகாக்கும் முறைகளும்

பொதுவாக நம்மவர்களில் அநேகமானவர்களுக்கு வயிறு சம்மந்தமான கீழ்க்கண்ட பிரச்சினைகள் பெருமளவில் இருக்கும். அதாவது வயிற்றுப் புண், வயிறு வீக்கம் அசீரணம், மலச்சிக்கல், வாயுத் தொல்லை, அப்பண்டிசிடிஸ் போன்ற தொல்லைகள் அதிகமாக இருக்கம். இவை போன்ற தொல்லைகள் அதிகமாக இருக்கும். இவைகளைப் பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

அசீரணம் (*Dyspepsia*). முக்கியமாக இந்த நோய் வரக்காரணம் நேரம் தவறி உணவு உண்ணும் பழக்கமே ஆகும். அடுத்து எண்ணெய் கலந்த உணவுகள் அதிகம் உண்பது. மது, புகைப்பழக்கம் காரணமாக அசீரணம் ஏற்படலாம். அடிக்கடி கோப்பி குடிப்பது. மனதில் அதிக கவலை. உடல் உழைப்புக் குறைவு போன்ற காரணங்களால் இந்த நோய் வரலாம். இதன் அறிகுறி என்னவென்றால் பசி எடுக்காது. நெஞ்சில் ஒருவகை எரிச்சல், புளிப்பான ஏப்பம் வருவது, குமட்டிக் கொண்டே இருப்பது, தலை சுற்றுவது என்பனவாகும்.

அடுத்த வயிற்றுப் புண் (*Ulcer*) இந்த நோய் உருவாகக் காரணம் அசீரணத்தால் வாயு உண்டாகி இந்த வாயு குடலிலுள்ள சவ்வுகளை அரிப்பதால் புண் உருவாக வாய்ப்பு உள்ளது. மேலும் அதிக காரமான உணவு, நேரம் தவறி சாப்பிடுவது, சாப்பிடாமல் பட்டினியாக இருப்பது, மதுப் பழக்கம் அதிகமானது, இவைகளால் வரக்கூடும். இதன் அறிகுறிகள் மிகத் தெளிவானது வயிற்றுவலி, எரிச்சல், வயிற்று வீக்கம், அழுகிக் கெட்டுப் போன உணவுகளை சாப்பிடுவதாலும் இந்த நோய் உருவாகலாம்.

மேலும் அப்பன்டிசிடிஸ் (*Appendicitis*) இந்த நோயின் அறிகுறிகள் வயிற்றின் வலது பக்கத்தில் அடிக்கடி வலி உண்டாகும். உட்பக்கம் பிசையும் வயிற்றின் அடிப்பாகம் கனமாகி மூச்சு விடுதல் சிரமமாக இருக்கும்.

### மலச்சிக்கல்

இது வரமுக்கியமான காரணம் தினசரி மலம் கழிக்கும் இல்லாமல் இருப்பது. நம்மில் பலருக்கு தினசரி மலம் கழிக்கும் பழக்கம் கிடையாது. எப்போது வருவது போல உணர்வு ஏற்படுகின்றதோ அப்போதுதான் கழிப்பார்கள். அன்று சேரக்கூடிய மலத்தை மலக் குடலிலிருந்து கழிக்காமல் இருந்தால் அது கட்டியாகி வெளியே வர முடியாமல் திணறும். அதன் காரணமாகத்தான் மலச்சிக்கல் ஏற்படுகிறது. மேலும் உணவு முறைகள் சரிவர இல்லாமல் மூன்று வேளையும் கடினமான உணவாக இருந்தாலும் மலச்சிக்கல் ஏற்படும்.

வாயு (*Gas*) இந்த பிரச்சினை வரக் காரணம். நேரம் தவறி சாப்பிடுவது. அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது. எண்ணெய் பொருள் வாயுவை அதிகமாக ஏற்படுத்தக் கூடிய பொருட்களை அதிகமாக சாப்பிடுவது. பழுதடைந்த பொருட்களைச் சாப்பிடுவது, புகை மதுபானப் பழக்கங்கள் வாயுவை ஏற்படுத்தக் கூடியன.

### இவற்றிலிருந்து பாதுகாக்கும் முறைகள்


எப்போதும் உணவு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். பழங்கள், கீரைகள், காய்கறிகள் போன்றவற்றை உணவில் சேர்த்து வரவேண்டும். முக்கியமாக குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும். அடிக்கடி அசைவ உணவுகளை சாப்பிடக் கூடாது. மது, புகைப் பழக்கத்தை நிறுத்த வேண்டும். சுத்தமான நீரை கூடியமட்டில் பருகிக் கொள்ள வேண்டும். அடிக்கடி எண்ணெயுடன் கலந்த நொறுக்குப் பண்டங்கள் உண்பதை நிறுத்த வேண்டும்.



தனுராசனம்

தினசரி யோகாசனப் பயிற்சி செய்து வருபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட நோய்கள் வரச் சாத்தியமில்லை. முக்கியமாக தனுராசனம் (*Bow*) 2 முதல் 3 நிமிடங்கள் வரை தினமும் செய்து வந்தால் இந்த நோய்களிலிருந்து விடுபட வாய்ப்பு அதிகமாக உள்ளது.


**COMPUTER SERVICE**
* COMPUTER REPAIR
* INSTALL NEW PERIPHERALS
* INSTALL SOFTWARE
* BASIC INTERNET TUTORIAL
* BASIC COMPUTER TUTORIAL




CALL: 647-274 -9931 KANNAN

**வீட்டு உணவுத் தயாரிப்புக்கள்**

பால்றொட்டி, சீனி அரிதாரம், பயற்றம் பணியாரம், அச்சு முறுக்கு, முறுக்கு, பூந்தி லட்டு, எள்ளுப்பாகு, முட்டை மா, தட்டுவடை போன்ற பலகார வகைகளையும்,

100 வரை உணவுவகைகளையும் வீட்டில் சமைத்துத் தரப்படும்.

மேலதிக விபரங்கள் 416-286-5026



பூட்டு? சாவி?

**KEERTH LOGSMITH**

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டுத் திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய

தொலைபேசி இலக்கம் (416) 439-3709

Pager: (416) 375-7330

**EASY HOME BUY**



Kiruba Kirushan

Service with a Broad Smile

வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.

Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!

With a small down payment, you could own your dream home.



FOR ALL YOUR HOUSING NEEDS CALL

416-414-5562

**NEW Technology**

Security and Sound Inc.

SALE AND REPAIR

APRIL Sale





Start up $79.99 & up

Pioneer DEH-P3300 CD Player Blowout

Sale $254.99

Alarm & Remote Starter Combo

Alarm Start up $89.99 & up

Start up $189.99 & up

Blaupunkt CD Player

Sale $174.99

Mobil Video DVD Much more...

www.newtechno.net

Tel: 416-335-4070

Shanger Cell (416) 451-4517

We also do any electrical work.

Fax: 416-335-9936

3501 McNicoll Ave., Unit 9 Scarborough, Ont. M1V 2N3

# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் / பொருளியல்

### 2001ஆம் ஆண்டிற்கான வருமானப் பத்திரங்களைப் பூர்த்தி செய்தல்



கடந்த இதழில் இருந்து ஒருவரது வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடிய கழிவுகளைப் பற்றி ஆராய்ந்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக இவ் இதழில் ஒருவரது தனிப்பட்ட ...யாபாரம் மற்றும் சொந்தத் தொழில் ...ிய வருமானங்களில் இருந்து கழிக்கக் கூடிய கழிவுகள் பற்றி ஆராய்வோம்.

பொதுவாக ஒருவரது வியாபாரத்தில் இருந்து பின்வரும் செலவுகளை கழிக்கலாம்.

1. ஒருவர்.
கணக்காளர் (Accountant),
வழக்கறிஞர்(Lawyer)
போன்றவர்களுக்கு
செலுத்தும் தொகை
(Professional Fees).

2. ஒருவர் வியாபாரத்திற்காக செலவு செய்யும் விளம்பரம் (Adverting) சம்பந்தமான செலவுகள்.

3. வியாபாத்திற்கு பயன்படுத்தும் இயந்திரங்கள், உபகரணங்கள், கணினிகள் போன்றவற்றின் செலவுகளின் இரு பகுதி.

4. வாடிக்கையாளர்களுக்கு கடனுக்கு வியாபாரம்.

5. வியாபாரத்தை நடத்துவதற்கு ஏதாவது ஒரு சங்கத்தில் சேர்ந்து அதற்காக செலுத்தும் வருடாந்த சந்தாப் பணம்.

6. வியாபாரத்தை நடத்துவதற்காக அரசாங்கத்திலிருந்து அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்காக செலுத்தும் பணம்.

7. வியாபாரத்தை காப்புறுதி செய்வதற்காக செலுத்திய பணம்.

8. வியாபாரத்திற்காக வைத்திருக்கும் வங்கிக் கணக்குகளுக்கு செலுத்திய மாதாந்த சேவைக்கான தொகை மற்றும் அந்தக் கணக்குகளுக்கு உங்களது வங்கி வட்டி அறவிட்டிருந்தால் அதற்கான பணம் என்பனவற்றை உங்கள் வருமானத்தல் இருந்து கழிக்கலாம்.

9. வியாபாரத்தில் திருந்த வேலை சம்பந்தமாக செலவுகள் செய்திருந்தால் அதற்கான பணம்.

10. உணவுகளுக்காகவும் (Food) மற்றும் உங்களது வாடிக்கையாளர்களை சந்தோசப்படுத்துவதற்காக Entretainment ) செலவு செய்த பணம்.

11. வாகனங்களுக்கு செலவு செய்த பணத்தின் ஒரு பகுதி.

12. வியாபாரக் காரியங்களிற்காக செலவு செய்த பணம்.

13. வியாபாரத்தை வைத்திருப்பதற்காக செலுத்திய வாடகை.

14. தொழிலாளர்களுக்கு செலுத்திய சம்பளம்.

15. வியாபாரத்தை சொந்த வீட்டிலே நடத்தியிருந்தால், வீட்டிற்கு செலவழித்த தொகையின் ஒரு பகுதிகள் கழிக்கப்படும்.

இவை தவிர்ந்த மற்றும் செலவுகளையும் சொந்த வியாபார வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும். இதன் தொடர்ச்சியை மீண்டும் அடுத்த இதழில் ஆராய்வோம்.

2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய இறுதி நாள் ஏப்பிரல் (April) 30ஆம் திகதியாகும்.

வருமான வரிப் பத்திரங்களைத் தயாரித்து அனுப்புவதற்கான இறுதிநாள் வரை காத்திருக்காமல், எவ்வளவு விரைவில் தயாரித்து அனுப்புகின்றீர்களோ அவ்வளவிற்கு நல்லது. ஏனென்றால், தாமதித்து அனுப்பினால் அரசாங்கம் (Revenue Canada) உங்களிடம் இருந்து வட்டி அறவிட வேண்டி இருக்கும். இதை தவிர்த்துக் கொள்வது நல்லது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

(தொடரும்)


**Mark Markandu, CGA**
Certified General Accountant
416 290 0946 / 416 834 6660
e-mail:
mark.markandu.cga@on.aibn.com


**பொது அறிவு**

- ஜான் டால்டன்" என்பவர்தான் முதன் முதலில் அணுக்கொள்கையை வெளியிட்டார்.
- யென் (Yen) ஜப்பான் நாட்டு நாணயம்.


தமிழர் நிர்வாகத்தில்


ஒரு



EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்



- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்
T.P 416-332-0944
5 SAMOSA $1.00

Embassy அமைந்துள்ள இடம்: FINCH / MIDDLEFIELD,
5200 FINCH AVE., SCARBOROUGH.
☎: (416) 332-8451

# விளையாட்டுத் தகவல்கள்-96

-எஸ். கணேஷ்

**கிரிகெட் செய்திகள்**



சென்ற 'விளம்பரம்' இதழில் ஆசிய டெஸ்ட் சம்யிபனான ஸ்ரீலங்கா. பாகிஸ்தானை வென்று சாதனை படைத்ததைப் பற்றிப் பார்த்தோம். இந்த இதழில் பெப்ரவரி மாதமும். மார்ச் மாதமும் நடந்து கொண்டிருக்கும் முப்பெரும் தொடர்களைப் பார்ப்போம். இந்தத் தொடர்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஸ்ரீலங்காவும் பாகிஸ்தானும் உலகப் புகழ் பெற்ற சாஜா கிண்ணப் போட்டிகளுக்கு தங்களை தயார்ப்படுத்தி வருகின்றனர். சாஜா கிண்ணப் போட்டிகள் ஏப்பிரல் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றன. பின்வரும் நாடுகளைத் தொடராக: இந்தியா Vs சிம்பாவே. அவுஸ்திரேலியா Vs சவுத்ஆபிரிக்கா. இங்கிலாந்து Vs நியூசிலாந்து பார்ப்போம்.

1. இந்தியா Vs சிம்பாவே:-

இந்தியாவும் சிம்பாவேயும் 5 ஒரு நாள் சர்வதேச போட்டிகள் விளையாடின. இதில் இந்தியா 3-2 என்ற ரீதியில் வெற்றி பெற்றது. ஆனாலும் இந்தியா தனது சொந்த மண்ணில் வைத்தே அதுவும் சிம்பாவேயிடம் இரண்டு ஆட்டங்களில் தோல்வியைக் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1. இந்தியா: 6 விக்கெட். 50 ஓவர் 274 ஓட்டங்கள் (லஷ்மன் 75. கங்குலி 57)
சிம்பாவே: 9 விக்கெட். 49.4 ஓவர் 277 ஓட்டங்கள் (Flower 71, Camell 84)
சிம்பாவே 1 விக்கெட்டால் வெற்றி.

2. இந்தியா: 6 விக்கெட். 50 ஓவர் 319 ஓட்டங்கள் (கங்குலி 86. திராவிட் 66)
சிம்பாவே: 43.3 ஓவர். Allout, 255 ஓட்டங்கள் (Fremi 63, Flower 29)
இந்தியா 64 ஓட்டங்களால் வெற்றி.

3. இந்தியா: 48.3 ஓவர். allout. 191 ஓட்டங்கள் (Kaif 56, Bangar 36)
சிம்பாவே: 4 விக்கெட். 44.2 ஓவர். 197 ஓட்டங்கள் (Flower 49, Camell 71)
சிம்பாவே 6 விக்கெட்டால் வெற்றி.

4. இந்தியா: 5 விக்கெட். 48.1 ஓவர். 244 ஓட்டங்கள் (யுவராஜ் 80. Kaif 68)
சிம்பாவே: 8 விக்கெட். 50 ஓவர் 240 ஓட்டங்கள் (A.Flower 89, G. Flowre 44)
இந்தியா 5 விக்கெட்டால் வெற்றி.

5. இந்தியா: 6 விக்கெட். 50 ஓவர். 333 ஓட்டங்கள் (மொங்கியா 159. யுவராஜ் 75)
சிம்பாவே: Allout. 42 ஓவர். 232 ஓட்டங்கள் (Ebrahim 42, Flower 48)

**ரெஸ்ட் ஆட்டங்கள்:**

இந்தியா: 7 விக்கெட், 570 ஓட்டங்கள் (சச்சின் 176. தாஸ் 105. பங்கர் 100)
சிம்பாவே: allout, 287 ஓட்டங்கள் (Carlisle 77, Cambell 57)
சிம்பாவே: allout, 182 ஓட்டங்கள் (Gripper 60, Campell 30)
அனில்கும்பிளே 5 விக்கெட்டுகளை எடுத்தார்.
இந்தியா இனிங்காலும் 101 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

சிம்பாவே 1st: allout. 329 ஓட்டங்கள் (Flower 92, Ebrahim 94)
இந்தியா 1st: allout, 354 ஓட்டங்கள் (கங்குலி 136. Sehwag 74)
சிம்பாவே 2nd: allout, 146 ஓட்டங்கள் (Flower 49, Carlisle 37)
இந்தியா 2nd: 6 விக்கெட். 126 ஓட்டங்கள் (சச்சின் 42. தாஸ் 31)
Harbhajan Singh 6 விக்கெட.டுக்களைக் கைப்பற்றினார்.
இந்தியா 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

**அவுஸ்திரேலியா Vs சவுத்ஆபிரிக்கா**

மூன்று டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியா 2-1 ரீதியிலும். 7 ஒருநாள் போட்டிகளில் இதுவரை 2-0 ரீதியிலும அவுஸ்திரேலியா முன்னணியில் திகழுகின்றது.

1. அவுஸ்திரேலியா: 50 ஓவர். 8 விக்கெட். 223 ஓட்டங்கள் (Gilchrist 37, Lehman 37)
சவுத் ஆபிரிக்கா: 44.4 ஓவர். Allout. 204 ஓட்டங்கள் (Dippenar 51, Klusener 85) அவுஸ்திரேலியா 19 ஓட்டங்களால் வெற்றி.

2. அவுஸ்திரேலியா: 50 ஓவர். 8 விக்கெட். 226 ஓட்டங்கள் (Maher 95, Martyn 42)
சவுத் ஆபிரிக்கா: 46.2 ஓவர். Allout. 181 ஓட்டங்கள் (Klusener 59, Kirsten 24) அவுஸ்திரேலியா 45 ஓட்டங்களால் வெற்றி.

**ரெஸ்ட் ஆட்டங்கள்:**

1. அவுஸ்திரேலியா: 7 விக்கெட். 652 ஓட்டங்கள் (Gilchrist 204, Martyn 133, Haypen 122)
சவுத் ஆபிரிக்கா: Allout, 159 ஓட்டங்கள் (Prince 49, Gibbs 34)
சவுத் ஆபிரிக்கா: Allout, 133 ஓட்டங்கள். பந்து வீச்சில் அவுஸ்திரேலியா சார்பாக Mcgrath 5 விக்கெட்டுகளும், Warne 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.



Gibbs Portrait


விரைவில் வெளிவருகிறது!

பாரதி புரொடக்ஷன்சின் "இளங்கதிர்" உதயம் 3

சிறுவர்களுக்கான மிகச்சிறந்த ஒளியிழை நாடா பார்க்கத் தவறாதீர்கள்!





தொடர்புகளுக்கு
(905) 785-7215
(416) 457-8424
(416) 490-9199

கதை
பாடல் - இசை

YARL

WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.



CUSTOM MADE....
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(905) 201-7733 (416) 419-9247

FREE ESTIMATE


அவுஸ்திலேயா இனிங்சாலும் 360 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

2. சவுத் ஆபிரிக்கா: Allout. 239 ஓட்டங்கள் (Hall 70, Adams 35)
அவுஸ்திரேலியா: Allout. 382 ஓட்டங்கள் (Gilchrist 138, Haypen 63)
சவுத் ஆபிரிக்கா: Allout, 473 ஓட்டங்கள் (Mckenzie 99, Kirsten 87)
அவுஸ்திரேலியா: 6 விக்கெட், 334 ஓட்டங்கள் (Ponting 100, Hayden 96)
அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுகளால் வெற்றி.

3. அவுஸ்திரேலியா: Allout, 315 ஓட்டங்கள் (Pointing 89, Gilchrist 91)
சவுத் ஆபிரிக்கா: Allout, 167 ஓட்டங்கள் (Gibbs 51, Ntini 27)
அவுஸ்திரேலியா: Allout, 186 ஓட்டங்கள் (Ponting 34, Waugh 42)
சவுத் ஆபிரிக்கா: 5 விக்கெட். 340 ஓட்டங்கள் (Gibbs 104, Kallis 66) சவுத் ஆபிரிக்கா 5 விக்கெட்டுகளால் வெற்றி.

**இங்கிலாந்து Vs நியூசிலாந்து**

அவுஸ்திரேலியாவிற்கு சென்று அவுஸ்திரேலிய அணியை திணறடித்து நியூசிலாந்து அணி. இங்கிலாந்துடன் நடைபெற்ற 5 ஒரு நாள் போட்டிகளில் 3-2 என்ற ரீதியிலும். 3 ரெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 1-0 ரீதியிலும் தற்போது உள்ளது.

ஒருநாள் போட்டிகள் ODI

1. இங்கிலாந்து: Allout. 40 ஓவர். 196 ஓட்டங்கள் (Knight 73, Thorpe 41)
நியூசிலாந்து: 38.3 ஓவர். 6 விக்கெட் 198 ஓட்டங்கள் (Astle 67, Nevin 55) நியூசிலாந்து 4 விக்கெட்டுகளால் வெற்றி.

2. நியூசிலாந்து: 50 ஓவர். 8 விக்கெட் 244 ஓட்டங்கள் (Memilan 69, Fleming 40)
இங்கிலாந்து: Allout. 37 ஓவர். 89 ஓட்டங்கள் (Astle 3, Adams 3 விக்கெட்)
நியூசிலாந்து அணி 155 ஓட்டங்களால் வெற்றி.

3. இங்கிலாந்து: 50 ஓவர். 5 விக்கெட். 244 ஓட்டங்கள் (Knight 80, Tresscothick 41)
நியூசிலாந்து: 46 ஓவர். Allout. 201 ஓட்டங்கள் (Fleming 76, Vincent 29)
இங்கிலாந்து 43 ஓட்டங்களால் வெற்றி.

4. இங்கிலாந்து: 40 ஓவர். 6 விக்கெட். 193 ஓட்டங்கள் (Thorpe 59, Vanghan 59)
நியூசிலாந்து: 38 ஓவர். Allout. 189 ஓட்டங்கள் (Carins 58, Adams 36)
இங்கிலாந்து 33 ஓட்டங்களால் வெற்றி.(D/L Method)

5. இங்கிலாந்து: 50 ஓவர். 8 விக்கெட். 218 ஓட்டங்கள் (Hussain 50, Shah 57)
நியூசிலாந்து: 48.5 ஓவர். 5 விக்கெட். 223 ஓட்டங்கள் (Astle 122, Mcmillan 44)
நியூசிலாந்து 5 விக்கெட்டுகளால் வெற்றி.

அண்மையில் அவுஸ்திரேலியாவுடனும் சரி. இங்கிலாந்துடனும் சரி நியூசிலாந்து அணி பல வெற்றிகளைக் குவித்து வருகின்றது. ஒரு நாள் போட்டிகளில் நியூசிலாந்து அணி தற்போது முன்னேறி வருவது குறிப்பிடத்தக்கது. 2003ஆம் ஆண்டுபெப்ரவரி மாதம் உலக கிண்ண போட்டிகள் சவுத் ஆபிரக்காவில் நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ்த் திரைப்படங்கள்

–தொகுப்பு - பரம்

### *1986ஆம் ஆண்டில் வெளிவந்த படங்களின் தொடர்ச்சி*

சிவாஜி பிலிம்ஸ் இவ்வாண்டில் இரு படங்களைத் தயாரித்துள்ளது.

1. அறுவடைகள்
2. ஆனந்தக் கண்ணீர்

ஆனந்தக் கண்ணீர்



'தாய்க்கு ஒரு தாலாட்டு' இல் நடிகர் நட்சத்திரமாக அறிமுகமானார். 'லட்சுமி வந்தாச்சு', 'தாய்க்கு ஒரு தாலாட்டு' ஆகிய படங்களில் பத்மினியுடனும் மேலும் 'தாய்க்கு ஒரு தாலாட்டு' இல் நடிகர்

அறுவடை நீண்ட இடைவேளைக்குப் பின் பிரபுவின் நடிப்பில் வெளியான இப் படத்தில் ராம்குமார் (பிரபுவின் அண்ணன்) நடித்திருந்தார். இதில் நடிகர், இயக்குனர், வசனகர்த்தாவாக R.P. விஸ்வம் நடித்திருந்தார். மேலும் இப் படத்தின் மூலம் R.P. விஸ்வம் பல படங்களுக்கு வசனகர்த்தாவாகவும், வில்லன் நடிகராகவும் பிரகாசித்தார். ஆனால் இன்று அவர் உயிருடன் இல்லை.

சிவாஜியின் படங்கள்:- 'ஆனந்தக்கண்ணீர்', 'சாதனை', 'தாய்க்கு ஒரு தாலாட்டு', 'மண்ணுக்குள் வைரம்', 'விடுதலை', 'லட்சுமி வந்தாச்சு'. 'ஆனந்தக் கண்ணீர்' - லட்சுமியுடன; 'சாதனை'யில் ஜோடி இல்லாமலும், 'மண்ணுக்குள் வைரம்', படத்தில் முரளியுடனும் (முதன் முதலாக) இதில் வினோதினி குழந்தை

விடுதலை



பாண்டியராஜனுடம் சிவாஜியுடன் சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்தும் கன்னட சுப்பர் ஸ்டார் விஷ்ணுவர்த்தனுடனும் பாலாஜி தயாரித்த 'விடுதலை' வெற்றிப் படத்தில் நடித்திருந்தனர். மேலும் ஹிந்தியில் வெளியான 'குர்பானி' யின் தமிழ் பதிப்புத்தான் 'விடுதலை' படம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் அம்ஜத்கான் ஏற்றிருந்த பொலீஸ் அதிகாரி வேடத்தில் சிவாஜி நடித்திருந்தார். மேலும் இதே படம் தெலுங்கில் தயாரான பொழுது சுப்பர் ஸ்டார் சிரஞ்சீவியுடனும் இதே படத்தில் சிவாஜி நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


Netbits Canada

Special Kids Program

- Computer Courses (Adult / Kids)
- Sales (New / Used Systems)
- Software/Network/Internet Installation
- Service and Repairs (All System)

Payments in Installments

Ms Office, Visul Basic Java,C++ / Visual C++

591 Parliament St # 101, Toronto.

☎ 416-928-1475


எல்லோருடனும் இன்முகத்துடன் இரு.
யாரிடமும் கசப்பான விடயங்களைப் பேசாதே.
சிறப்பையும் தகுதியையும கௌரவி. -வால்ட்டேர்


UNITED PERSONAL INJURY ASSOCIATES

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*

ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

பிழையான அனுபவமில்லாத/ ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

உங்களுக்குத் தெரியுமா?

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் $172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

தீபன் - 416-505-9804

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 75 Collier St., Unit A, Barrie
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main St. East, 1st Floor, Hamilton



யோகா சோதிடம்

- ★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
- ★ சுபமுகூர்த்தம் கணித்தல்
- ★ சாதகக்குறிப்புக் கணித்தல்
- ★ பலன் பார்த்தல்


☎: (416) 299-8361



YARLCAN STEAM CLEANING

CARPET CLEANING

DUCT CLEANING







உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்

மோகன் ☎: (905) 887-7436 Cell : 721-9709

# தூறல்

**ஒரு பெண் + ஒரு பிரச்சினை + ஒரு சமூகம்**

அண்மைக் காலங்களாக பெண்கள் பற்றிய பிரச்சினைகளை மையமாகக் கொண்டு பல திரைப்படங்கள் வெளிந்து கொண்டிருக்கின்றன. *Lagaan Oscar* விருது தேடிச் செல்ல அதே இந்தி திரைப்பட உலகிலிருந்து *"Benwandar"* என்ற திரைப்படம் பல திரைப்படவிழாக்களில் விருதுகளை பெற்றுள்ளது. ரேவதி ஆங்கிலத்தில் 'மித்ர மை ப்ரண்ட்' (*Mitra My Friend*) என்ற திரைப்படத்தை எடுத்துள்ளார். சப்னா ஆஸ்மியின் மைத்துனியான தபுவை மையமாகக் கொண்டு *Chandiani Bar* எனும் திரைப்படங்கள் இந்தியாவிலும் மற்றையது ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது.

*B awader*

உண்மைச் சம்பவத்தை மையாகக் கொண்டது இத்திரைப்படம். நந்திதாஸ் (அழகி. கன்னத்தில் முத்தமிட்டால். *Fire* போன்றவற்றின் நாயகி) ஒரு சாதாரண ஒடுக்கப்பட்ட கிராமத்துப் பெண். அன்பான கணவனும் பிள்ளையும் உண்டு. இவர்களது தொழில் பானை சட்டி செய்தல். தீப்தி நாவல் (*Deepti Naval*) சமூக சேவகி. பாலியல் திருமணத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பவர். நந்திதாஸ் இவர்களது இயக்கத்தில் இணைகிறார். இவருக்கு அரசின் வருமானமும் கிடைக்கிறது. தனது கிராமத்தில் நடைபெறும் பாலியல் திருமணம் பற்றி நகர் காவலருக்கு (பொலிஸ்) தகவல் கொடுக்கிறார். நகர் காவலர் இலஞ்சம் பெற்று கிராமத் தலைவருக்கு நந்திதாஸை காட்டிக் கொடுத்துவிடுகிறார். விளைவு. நந்திதாஸ் கிராமத் தலைவராலும் வேறு சிலராலும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுகிறார். தீப்தி நாவல் இச்செயலுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார். வழமைபோல் மருத்துவ சான்றிதழ், பொலிஸ் அறிக்கை எனத் தொடர்கிறது! தீப்தி நாவலின் சமூக சேவை அமைப்பு பிரதம மந்திரி மட்டத்திற்குக் கொண்டு செல்கிறது. பிரதம மந்திரியும் பொதுக் கூட்டமொன்றில் வைத்துப் பிரதம மந்திரி நிவாரணத்திலிருந்து ஒரு இலட்ச ரூபாய் நந்திதாஸ்க்கு கொடுக்கிறார். வல்லுறவில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். நீதிபதியின் தீர்ப்பின் ஒரு பகுதி 'உயர் சாதியினர் (ஒடுக்குபவர்கள்). தாழ்த்தப் பட்டவர்களை (ஒடுக்கப்பட்டவர்கள்) தொடமாட்டார்கள்' எனவே குற்றச் சாட்டு உறுதியளிக்கப்படவில்லை' எனக் கூறப்படுகிறது! இப்பொழுது நந்திதாஸ் விபச்சாரி பட்டத்துடன் தனது கணவனுடன் வாழ்க்கையைத் தொடருகிறார். *Jagmohan Mudhra* தயாரித்து. இயக்கியுள்ளார். இத்திரைப்படத்தை. சிறப்பான கதையமைப்பு. நடிப்பு. இயக்கம் என்பனவற்றுடன் பெண்ணின் கொடுமைகளை சிறப்பாக சித்தரித்துள்ளார் இயக்குனர். அனைத்து சமூக சேவை அமைப்பினரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படமிது. வெறும் பகட்டும். பட்டத்துக்கும் பணத்துக்குமாக சேவை செய்யாமல் உண்மைக்காக குரல் கொடுக்க வேண்டும்.

*Chandini Bar*

கலவரத்தில் பெற்றோரை இழந்து மாமனுடன் பம்பாய் வருகிறார் தபு. மாமனின் நண்பனின் வற்புறுத்தலுக்கு அமைய பம்பாயில் உள்ள ஒரு *beer bar* இல் *Dancer* ஆக வேலை செய்கிறார். இதற்கிடையில் ஒரு நாள் மாமன் இவளுடன் உறவு கொண்டுவிடுகிறார். வெறுத்து ஒதுங்கிய நிலையில் உள்ள இவளை *bar*இக்கு வரும் தாதா ஒருவர் விரும்பி திருமணம் செய்து கொள்கிறார். இரு பிள்ளைகளும் இவர்களுக்கு உண்டு. பிள்ளைகள் தந்தை வழியில் செல்லவிடாது வளர்க்கிறாள் தாய். தந்தையை ஒரு நாள் பொலிஸ் கொன்றுவிடுகிறது. தாய் மீண்டும் *dancer* ஆகிறாள். பிள்ளைகளை சீராக வளர்க்கிறார். ஒரு பணக்காரன் பிள்ளை செய்த தவறுக்கு தபுவின் மகனை கைது செய்கின்றனர். மகனை விடுதலை செய்வதற்கு தபு தனது கற்பை மீண்டும் இழக்கிறார். விடுதலையான மகன் தான் கைது செய்யப்படுவதற்கு காரணமாக இருந்தவனை கொன்று விடுகிறான்.

1. தாதாக்களின் சமூகம் எவ்வாறு இயங்குகிறது.
2. ஒரு சமூகத்தில் குற்றவாளியின் மகன் எவ்வாறு கணிக்கப்படுகிறான்.
3. *bar*களில் *dancer* ஆக வேலை செய்யும் பெண்களின் அவல வாழ்க்கை என்பன சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தபு மற்றும் தாதாவாக நடிக்கும் *Atul Kulkarani* போன்றவர்கள் நன்றாக நடித்துள்ளனர். *Ram Gopal Venna*விடம் நீண்டகாலம் உதவி இயக்குனராகக் கடமையாற்றிய 33 வயது நிரம்பிய *Bhandankan* இப்படத்தை இயக்கியுள்ளார்.

***Mitra My Friend***



பெண்களால், பெண்களுக்காக எடுக்கப்பட்ட படம். கதை - பிரியா. வசனம் - சுதா. இயக்கம் - ரேவதி. இசை - பவதாரிணி. பாடல்கள் - தாமரை. பாடியோர் - வசுந்தரதாஸ். பம்பாய் ஜெயஸ்ரீ. ஒளித்தொகுப்பு - கௌசியா.

18 வயதில் திருமணமாகி அமெரிக்கா வரும் சோபனா. கணவன். பிள்ளை என தனது எல்லைகளை குறுக்கிக் கொள்கிறார். கணவன் சொந்தத் தொழில். வேலை முடிய *New York* இல் *business meeting* எனப் பறப்பவர். பிள்ளை நவீன அமெரிக்கக் குழந்தை. தனது *boy friend* உடன் ஊர் சுற்றுகிறார். தாயை வெறுத்து தனியாக வாழத் தொடங்குகிறார். இவர்களது வீட்டிற்கு பக்கத்தில் குடிவரும் வெள்ளையின் அண்ணன். தம்பி. (அண்ணனது வயது சுமார் 25 . தம்பி 10 - 12) இவர்களுக்கும் ரேவதிக்கும் நட்பு ஏற்படுகிறது. இந்நிலையில் சோபனா தனது பிரச்சினைகளை *e-mail chat* இல் கூறுகிறார். அதற்கு *mitra* என்ற நண்பரிடமிருந்து பதில் கிடைத்தது. இது தொடர்கிறது. இதற்கிடையில் *boyfriend* ஆல் காயமுற்று வைத்தியசாலையில் மகள் அனுமதிக்கப்படுகிறாள். மகளும் தாயும் ஒன்று சேர்கின்றனர். *Mitra* யார் எனத் தெரியவிரும்பும் மகள். அவரை / அவளை ஒரு *Restaurant* இல் சந்திக்க வரும்படி கூறுகிறாள். பக்கத்து வீட்டு 'நண்பர்களுடன் கதைப்பதையே ஐயம் கொள்ளும் கணவன்' எனப் பலவாறு குழம்பும் தாய் இறுதியாக செல்கிறாள். *Mitra* வேறு யாருமல்ல கணவனே. குடும்பம் ஒன்று சேர்கிறது. சுபம்.

பொதுவாகவே தமிழ்த்திரைப்படத்தில் காணப்படும் ஓட்டையான கதையமைப்பும் இங்கேயும் காணப்படுகிறது. தனது வீட்டு *e-mail address* தெரியாத ஒரு படித்த கணவன் - நம்பமுடியாமல் உள்ளது. கிளைமாக்ஸ் எனக் கூறி நீளும் காட்சிகள் வெறுப்பேற்றுகின்றன. 18 வருடங்கள் அமெரிக்காவில் கார் ஓட்டத் தெரியும். ஆனால் பட்டிக்காட்டு மனைவி. சற்று அதிகமானது.

கணவனுக்கும், மனைவிக்குமான உறவில் ஏற்படும் விரிசல் யதார்த்தமாக காட்டப்பட்டுள்ளது. மகளுடன் தாய் சண்டை போடுவதற்கும், தந்தை சமாதானப்படுத்துவதற்குமான முறை அதாவது கையாளப்படும் முறை என்பது நாம் அனைவரும் பாடம் படிக்க வைக்கிறது. பெண்களை இப்பொழுதும் சேவகர்களாக பாவிப்பவர்களுக்கு பல இடங்களில் சாட்டையடி.

தாமரை



புலம்பெயர் நாட்டில் உள்ள பெற்றோர் கட்டாயம் இதனைப் பார்க்க வேண்டும். இம் மூன்று படங்களிலும் முதலிரண்டும் *Markham & Ellesmere* இல் உள்ள *N.N. Video* கடையிலும் (சங்கமத்துக்கு அருகில்) *Mitra My Friend* அனைத்து வீடியோ கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


-வானரன்-


# Dr. Edo Teku

*is pleased to announce*

That: **Dr. Assefa Noza**
**Dr. Janan Bilbly**
**Dr. Irina Bystrine**

Family Physicians with many years of experience have joined Kingsdale Health Center.



***Services Provided***

- Yearly Physical Exam
- Pregnant Women & Children care
- Allergy Shots
- Preventive Medicine
- Counseling
- Drivers Medical Exam
- Medical Medical Exam
- Medical Laboratory
- On Premises

***Specialists***

- Internal Medicine
- Obstetrics & Gynecology
- Pediatrics
- Neurology
- Foot Specialist

*Call us now for appointment* **(416) 539 - 8181**

**Located**
**1178 King St. West**
**(Dufferin & King)**
**Toronto, Ont.**

**Open**
Week Days 9am - 6pm
Saturday 9am - 3pm

**WALK-IN AND NEW PATIENTS WELCOME.**


பொது அறிவு

- கி.பி. 29 ஆம் ஆண்டு இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்.
- மெக்னீஷியா என்னும் இடத்தில் காந்தக் கற்கள் மிகுதியாகக் கிடைத்ததால் Magnet என்ற பெயர் பெற்றது காந்தம்.

# விண்வெளி

- தருபவர் - கனி



## அந்நியர்கள்:- 80

சென்றதடவை கூறியிருந்த *Arecibo Message* பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்டிருந்தேன். நிச்சயமாக அதைப் பற்றி அலசி ஆராய்ந்திருப்பீர்கள். அதற்கு முன் இந்த *Arecibo Message* தொடர்பான விடயத்தைக் கூறிவிடுகிறேன்.

ஏலியன்கள் விடயத்துடன் தொடர்புடைய இன்னொரு விடயம் தான் *Crop Circle*. இந்தக் *Crop Circle* என்பது முதன் முதலில் இங்கிலாந்தில் தான் அடையாளம் காணப்பட்டது. பின்னர் உலகின் பல பகுதி மக்களும் இந்தக் *Crop Circle* எனும் வடிவங்களைக் கண்டுள்ளார்கள். பெரிய கோதுமை வயற்பரப்புகளில் இரவோடு இரவாக பல வடிவங்கள் செய்யப்பட்டுக் காணப்பட்டன. முதலில் வட்ட வடிவாகக் காணப்பட்ட வடிவங்களால் இது *Crop Circle* எனப் பெயரிடப்பட்டது. பின்னர் பல்வேறு வடிவங்களில் இந்த வயற்பரப்பு வடிவங்கள் காணப்பட்டன. வளர்ந்த கோதுமைக் கதிர்களை மடித்து ஒடித்து ஒரே இரவில் ஆக்கப்பட்ட இவ் வடிவங்கள் யாரால் செய்யப்பட்டது? ஏன் செய்யப்பட்டது? அவ்வடிவங்கள் சொல்லும் செய்திகள்தான் என்ன என்பது பெரும் புதிராக இருந்தது. புதிராகத் தான் இன்றும் உள்ளது.

இந்தக் *Crop Circle* பற்றிய ஆய்வு பலராலும். பல நிறுவனங்களும் செய்யப்பட்டு வருகிறது. முதலில் இது ஏலியன்களால் தான் பூமியிலுள்ளவர்களுக்கு சில செய்திகளைக் கூறச் செய்யப்பட்டது என ஐயுறப்பட்டது. ஒரு வேளை காற்றின் வேக மாற்றங்களினால் இது ஏற்பட்டிருக்குமோ எனவும் சந்தேகிக்கப்பட்டது. ஒரு வேளை இயற்கையில் உள்ள காந்த, மின்சக்திகளின் சேர்க்கை, மாற்ற விளைவுகளால் இந்த வடிவங்கள் தோன்றியிருக்குமோ எனவும் சிலர் சந்தேகப்பட்டார்கள். பேய், பிசாசுகளின் சேட்டையோ எனப் பயந்தவர்களும் உண்டு. ஈற்றில் சில விசமிகளின் கைங்கரியம் என முடிவு செய்யப்பட்டது. காலில் சில பலகைகளைக் கட்டி மிகமேவமாக கோதுகைக் கதிர்களை அமுக்கி, அழுத்தி இந்த வடிவங்களைச் செய்கிறார்கள் என்று நிருபித்திக் காட்டப்பட்து.

ஆனால் இதில் பலருக்கு ஒப்பிதல் இல்லை. ஏனெனில் சில வடிவங்கள் பல மனிதர்கள் கூடி சில மணிநேரத்தில் அவ்வளவு சீராக அமைக்க முடியாது. அத்துடன் சிக்காலன பல வடிவங்கள் சமச்சீராக காணப்பட்டன. மேலும் பல நாடுகளில் இந்த *Crop Circle*கள் காணப்பட்டன. எனவே இந்த விசமிகளும் தம்முள் ஒரு நிறுவனமாக அமைத்துத் தொழிற்பட்டவர்களா? எனக் கேட்க வேண்டியுள்ளது. அதைவிட நடு இரவில் இப்படிச் செய்வதில் இவர்களுக்கு என்ன இலாபம் என்றெல்லாம் கேட்க வேண்டியுள்ளது. எனவே இன்னமும் ஒரு சாரார் இந்த *Crop Circle* விவகாரம் எல்லாம் ஏலியன்கள் விளையாட்டுத்தான் எனக் கூறிக் கொண்டு திரிகின்றார்கள்.

இவர்களது எண்ணத்தை உறுதிப்படுத்துவது போல் சென்ற வருடம் அதாவது 2001ஆம் ஆண்டு இங்கிலாந்தில் *Crop Circle* செய்தி கிடைக்கப்பட்டது.

முதலில் சிக்கலான பல பெரியதும், சிறியதுமான சமச்சீர் வட்டங்கள் கோதுமை வயலில் காணப்பட்டது. மறுநாளிலும் அதே வயலில் வேறு வடிவங்கள் காணப்பட்டது மூன்றாவது நாளும் அதே வயலில் இன்னொரு வடிவம் காணப்பட்டது. மூன்றாவது நாள் காணப்பட்ட வடிவம் தான் ஆச்சரியப்பட வைத்தது. அது வேறு ஒன்றுமில்லை. 1974ஆம் ஆண்டு *Puerto Rico*இல் இருந்து *Globular Cluster M13* இக்கு அனுப்பப்பட்ட *Arecibo Message* இன் சமிக்கைத் துடிப்பு வடிவம் தான். 7 கட்ட சமிக்கை வடிவங்களும் தெளிவாகக் காணப்பட்டது. இதுதான் விஞ்ஞானிகளை ஆச்சரியப்பட வைத்தது. (சென்ற தடவை விண்வெளியை மீண்டும் ஒரு தடவை வாசித்து பாருங்கள் மார்ச் 15. 2002 இதழ்)

ஒரே இரவில் மனிதர்களால் இந்தச் செய்தி வடிவத்தை கோதுமைக் கதிர்களை அழுத்திச் செய்வதென்பது இலகுவான விடயமல்ல. எனவே இந்தச் சிக்கலான வடிவம் மனிதரல்லாத வேறு ஏதோ வகையில் தான் தோன்றியிருக்க வேண்டும் அல்லது உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். இதனைப் பார்த்தவர்கள் ஆய்வு செய்தவர்கள் - செய்பவர்களின் அபிப்பிராயம் என்னவெனில் ஏலியன்கள்தான் இதனை எமக்கு அனுப்பியிருக்க வேண்டும். இதிலும் கூடச் சிக்கல்கள் உள்ளன.

*Arecibo Message* ஆனது 25,000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரக் கூட்டத்திற்கு அனுப்பப்பட்டது. இதன்படி நமக்குத் தெரிந்த தொழில் நுட்பத்தின்படி அச் செய்தியின் பதில் கிடைப்பதற்கு நமக்கு 50.000 ஆண்டு செல்லும். ஆனால் *Crop Circle* வடிவில் கோதுமை வயலில் கிடைக்கப் பெற்ற செய்தி எமக்கு 27 ஆண்டுகளில் கிடைக்கப் பெற்றுள்ளது. இது எப்படி என்பது தான் பெரிய புதிர்.

புதிரெல்லாம் பெரிய புதிரல்ல. இடையில் ஏதாவது ஒரு சிறிய முடிச்சு அல்லது மடிப்பு அம்முடிச்சு அவிழ்ந்தால்? யாரும் அம்முடிச்சை அவிழ்த்து விடலாம். அது நீங்களாகவும் இருக்கலாம். ஏன் நீங்களாக இருக்கக் கூடாது? சிந்தனையை கொஞ்சம் கூர்மைப்படுத்துங்கள். ஒருவேளை அடுத்ததோ அல்லது அதற்கடுத்த நோபல் பரிசு கூட உங்களுடையதாக இருக்கலாம்.

### தெரிந்து கொள்ளுங்கள்

- இளவயதில் தலை நரையா? கவலைப்படவேண்டாம். சீயக்காய், பாசிப்பயறு, பச்சரிசி, சிறிது கறிவேப்பிலை, மருதோன்றி இலை ஆகியவற்றை காயவைத்து அரைத்து தலைக்குத் தேய்த்து குளித்து வாருங்கள். பிறகு. பாருங்கள்.


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 129

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| | 4 | ■ | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | 5 | ■ | |
| 6 | | | | | ■ | ■ | |
| | ■ | ■ | | ■ | | | 7 |
| | | 8 | ■ | | 9 | ■ | ■ |
| ■ | ■ | 10 | | 11 | 12 | | |

**இடமிருந்து - வலம்**

1. கலங்கரை விளக்கம்
4. மகிழ் (வல - இட)
6. யாழிசையில் வல்ல ஒரு தேவகணத்தார்
7. இளம் பெண் (வல - இட)
8. உறுதி (வல - இட)
9. கற்றையாக சேர்ந்த தலைமயிர் (வல-இட)
10. தற்போது தமிழீழத்தில் நடைபெறும் எழுச்சி நிகழ்வு

**மேலிருந்து - கீழ்**

1. சுக்கிரவாரம் 2. கடல்
3. யாழ் மாவட்டத்தின் ஒரு அரசியல் பிரிவு
5. உணவு (கீழ் - மேல்)
10. முட்டை (கீழ் - மேல்)
11. துளை (கீழ் - மேல்)
12. பத்தாம் திதி

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் APRIL 24, 2002க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ரி | ந் | து | ண | ர் | வு | ■ |
| ள | ■ | ■ | ■ | ■ | வ | டி | ■ |
| கி | ங் | கி | ணி | ■ | உ | ப | ரி |
| த | ■ | ளி | ■ | ம் | ■ | ப் | ■ |
| ம் | ■ | ஞ் | ■ | ப | ■ | ழ் | ■ |
| ■ | வ | சி | ய | ம் | ■ | கீ | று |
| ள | ■ | ல் | ■ | த | வி | ■ | ற |
| சு | ழை | ■ | ■ | க | ண் | ண | கி |

**128இல் வெற்றி பெற்றோர்**
1) V. UMA, Mississauga, Ont.
2) R.Kamalanathan. Donmills, On.


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!
* *733 kennedy Road [Ken-Mark Plaza]*

# தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 044-621-0294

# ELECTRICAL REPAIRS




உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் ரேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

# YOGA CLASSES


*For Natural Cure*
*Health & Peace of Mind*

Raji (Ellango) "Yoga Bhooshna"
(Certified Yoga Instructor)
Tel.: (416) 743-8173
Fax: (416) 743-8392
78 Riverdale Dr., Etobicoke Ont., M9V 2T7



# COMPUTER REPAIR & INSTALLATION

* REPAIR



* SOFTWARE INSTALLATION
* SETUP HOME NETWORK
(hardware not included ($49.99)

PLACE: 720 KENNEDY ROAD
(KENNEDY & EGLINTON)

* HARDWARE INSTALLATION
(You buy the parts we install it)

| | |
|---|---|
| * SOUND CARD | ($14.99) |
| * NETWORK CARD | ($14.99) |
| * MODEM CARD | ($14.99) |
| * MEMORY | ($14.99) |
| * VIDEO CARD | ($14.99) |
| * CD ROM | ($14.99) |
| * HARD DRIVE | ($14.99) |
| * CDR-RW | ($14.99) |

* AND MUCH MORE

T.P: 416-265-2319

# அன்புத் தமிழ்



**- கவிஞர் வி. கந்தவனம்**

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் தமிழ் மக்களின் தலையாய பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று. விருந்து என்றால் புதிது. ஊருக்குப் புதிதானவர் வீட்டுக்கு வருவாரெனில் அவரைத் தக்கவாறு உபசரித்தல் இல்லறத்தில் நின்று ஒழுகுவாரின் தலையாய கடனாகும்.

*இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு (81)*

என்பது திருக்குறள். விருந்து ஓம்புதல் - வந்த புதியவருக்கு உணவளித்தல். வேளாண்மை செய்தல் - பிற உதவிகளைச் செய்தல். உணவு கொடுத்ததோடு எமது கடன் முடிந்து விட்டதெனத் திருத்திக் கொள்ளல் ஆகாது. வந்தவர் அங்கேயே அன்றைக்குத் தங்க வேண்டுமா அல்லது வேறு எங்கேயாவது செல்ல வேண்டுமா அல்லது காசு பொருள் ஏதாவது வேண்டுமா. என்ன வேண்டுமோ அதனை முடிந்த வரை உதவுதல் வேண்டும். இல்வாழ்வதே விருந்தினரை வரவேற்று, உணவளித்து அவர்களுக்கு வேண்டும் பிற வசதிகளையும் செய்வதற்குத் தான். வேறு ஒன்றுக்குமல்ல என்று வள்ளுவர் கூறுவது விருந்தோம்பலின் அவசியம் கருதியேயாகும்.

கற்பு வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பெண்ணின் சிறப்புகளில் விருந்து புறந்தருதலும் ஒன்று.

*கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்*
*மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்*
*பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்*
*(பொருள். 150)*

என்பது தொல்காப்பியம். இத்தகைய சிறப்புகளையுடைய தலைவியின் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். அதுவும் இரவிலே வந்தார். அந்த நேரத்தில் சாப்பாடு போதியளவு இருக்கவில்லை. வந்தவரை இன்முகத்துடன் வரவேற்றாள். வந்தவர் சாதாரணமானவர் அல்லர். நல்ல புகழையுடைய விருந்தினர். வீட்டிலே சமையல் செய்வதற்கு இளையோர், அடியோர் எனப் பலர் இருந்தனர். இருந்தாலும் தானே செய்ய வேண்டும் என்னும் விருப்பால் சமைக்கத் தொடங்கினாள் தலைவி. நெய்யை மிகுதியாக விட்டுத் தாளித்து இறைச்சிக் கறி சமைத்தாள். நெய்ப் புகை அவளது நெற்றியில் நுண்ணிய வியர்வைத் துளிகளைத் தோற்றுவித்தது. அத் துளிகளோடு குறுகிக் குறுகி நடந்து அவள் விருந்தோம்பிய சிறப்பைக் கண்டு இன்புற்றான் தலைவன். இச் செய்தியை நற்றிணையில் உள்ள 41ஆம் பாடல் தெரிவிக்கின்றது.

அதியமான் நெடுமானஞ்சி என்பவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். போரிலே வல்லவன். மாற்றாரைப் போரிலே வென்று செல்வங்களை ஈட்டியவன். ஒரு முறை பழங் காலந்தொட்டு நிலைபெற்றிருக்கின்ற விடரகம் என்னும் பெரிய மலையில் யாரும் அடைய முடியாத உச்சியிலே வளர்ந்த சிறிய இலைகளையுடைய நெல்லியின் இனிய கனியை அதியமான் பெற்றான். இதனை உண்பவர் நோய்நொடி இன்றி நெடுங்காலம் வாழ வல்லவர் என்பது அவனுக்கு நன்கு தெரியும். அதனை மகிழ்ச்சியோடு அவன் உண்ணக் கருதியவேளை அறிவிற் சிறந்த அவ்வைப் பிராட்டியார் அவன் மனைக்கு வருகை தந்தார். அரிதாகப் பெற்ற மருந்தனைய நெல்லிக் கனியைத் தான் உண்ணாது விருந்தாக வந்த அவ்வைக்கு அளித்து அகமகிழ்ந்தான் அதியன்.

நெல்லிக் கனியை உண்ட பின்னரே அதன் பெருமை அவ்வையாருக்குத் தெரிய வந்தது. வியப்புற்று. 'பால்போலும் பிறை பொலிந்த சடையையும் கரிய மிடற்றினையும் உடைய சிவனைப் போல நீ என்றும் நிலை பெறுவாயாக' என்று அவர் மகிழ்ந்து அதியமானை வாழ்த்திய பாடல் இது:

*வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்*
*களம்படக் கடந்த கழறொடித் தடக்கை*
*ஆர்கலி நறவின் அதியர் கோமான்*
*போராடு திருவிற் பொலந்தார் அஞ்சி*
*பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி நீல*
